பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை- 4

08 11 2024 7 15

வெள்ளிக்கிழமை காலை

தலைப்புச் செய்திகள்

1. உலக அளவில் மாறி வரும் அரசியல் மற்றும் பாதுகாப்பு சூழலில் கடற்படையை வலுப்படுத்துவது அவசியம் என்று குடியரசுத்தலைவர் திருமதி திரௌபதி முர்மு வலியுறுத்தியுள்ளார்.

2. இந்திய ராணுவ பாரம்பரிய விழா புதுதில்லியில் இன்று தொடங்குகிறது.

3. வெளியுறவு அமைச்சர் திரு. ஜெய்சங்கர் சிங்கப்பூரில் இன்று அந்நாட்டு அதிபர் திரு. தர்மன் ஷண்முக ரத்னம் உள்ளிட்டோரை சந்தித்து இருதரப்பு உறவுகள் குறித்து விவாதிக்க உள்ளார்.

4. ஜார்கண்ட் சட்டப்பேரவைத் தேர்தல் பிரச்சாரத்தின்போது நடத்தை நெறிமுறைகளை பின்பற்ற வேண்டும் என்று அனைத்துக் கட்சிகளையும் தேர்தல் ஆணையம் கேட்டுக்கொண்டுள்ளது.

5. உலக செஸ் தரவரிசையில் இந்தியாவின் அர்ஜுன் எரிகேசி இரண்டாம் இடத்திற்கு முன்னேறியுள்ளார்.

*---- இனி விரிவான செய்திகள் ---*

<<<<>>>>

உலக அளவில் மாறி வரும் அரசியல் மற்றும் பாதுகாப்பு சூழலில் கடற்படையை வலுப்படுத்துவது அவசியம் என்று குடியரசுத்தலைவர் திருமதி திரௌபதி முர்மு வலியுறுத்தியுள்ளார்.

கோவாவில் நடைபெற்ற நிகழ்ச்சியில் பேசிய அவர், 7 ஆயிரத்து 500 கிலோ மீட்டருக்கும் மேலான கடலோரத்தைக் கொண்டுள்ள இந்தியாவில் பொருளாதார வளர்ச்சி, பிராந்திய போக்குவரத்து ஆகியவற்றுக்கு பல்வேறு வாய்ப்புள்ளதாகத் தெரிவித்தார்.

நமது நாட்டின் மிகப்பெரிய கடல்சார் திறனை வளர்ச்சியடைந்த நாடாக மாற்றுவதற்கான நடவடிக்கைகளில் பயன்படுத்தப்பட வேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.

கடற்படையின் தயார்நிலை மற்றும் உறுதியான அர்ப்பணிப்பால் இந்தியப் பெருங்கடல் பகுதியில் பாதுகாப்பான அமைதியான சூழலை இந்தியா உறுதிப்படுத்தியுள்ளதாகத் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியின்போது மிக்29-கே ரக போர் விமானங்களை இயக்குதல், போர்க் கப்பல்களில் இருந்து ஏவுகணைத் தாக்குதல் பயிற்சிகள், நீர்மூழ்கிக் கப்பல் செயல்பாடுகள் உள்ளிட்ட கடற்படையின் பல்வேறு நடவடிக்கைகளை குடியரசுத்தலைவர் பார்வையிட்டார்.

<<<<>>>>

மகாராஷ்டிர சட்டப்பேரவை தேர்தல் பிரச்சாரக் கூட்டத்தில் பிஜேபி மூத்த தலைவரும், பிரதமருமான திரு. நரேந்திர மோடி இன்று உரையாற்ற உள்ளார்.

இதுகுறித்து சமூக வலைதளத்தில் பதிவிட்டுள்ள அவர், துலே மற்றும் நாசிக் பகுதிகளில் நடைபெற உள்ள பொதுக்கூட்டங்களில் தாம் பங்கேற்பதன் மூலம் மக்களின் ஆசியைப் பெற உள்ளதாக கூறியுள்ளார்.

மகாராஷ்டிர சட்டப்பேரவைத் தேர்தல்களில் தேசிய ஜனநாயக கூட்டணிக்கு அம்மாநில மக்கள் பெரும் வெற்றியை அளிப்பார்கள் என்று திரு. மோடி நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

<<<<>>>>

மகாராஷ்டிர சட்டப்பேரவை தேர்தல் பிரச்சாரத்தில் அனைத்துக் கட்சியினரும் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர்.

நட்சத்திர பேச்சாளர்கள் பட்டியலை பிஜேபி வெளியிட்டுள்ள நிலையில், காங்கிரஸ் கட்சியும் நட்சத்திர பேச்சாளர் பட்டியலை வெளியிட்டுள்ளது.

காங்கிரஸ் தலைவர் திரு. மல்லிகார்ஜுன் கார்கே, எதிர்க்கட்சித் தலைவர் திரு. ராகுல் காந்தி, கட்சியின் பொதுச்செயலாளர் திருமதி பிரியங்கா காந்தி, கர்நாடக முதலமைச்சர் திரு. சித்தராமையா, தெலங்கானா முதலமைச்சர் திரு. ரேவந்த் ரெட்டி உள்ளிட்டோர் இதில் இடம்பெற்றுள்ளனர்.

அவர்கள் வரும் 12ஆம் தேதி முதல் 17ஆம் தேதி வரை பல்வேறு இடங்களில் வாக்கு சேகரிப்பார்கள் என்று காங்கிரஸ் கட்சி அறிவித்துள்ளது.

இதற்கிடையே மகாராஷ்டிர துணை முதலமைச்சரும், பிஜேபி தலைவர்களில் ஒருவருமான திரு. தேவேந்திர பட்னவிஸ் அக்கட்சிக்கு ஆதரவாக **Yavatmal** மாவட்டத்தில் நேற்று தேர்தல் பிரச்சாரத்தில் ஈடுபட்டார்.

தேசியவாத காங்கிரஸ் கட்சித்தலைவர் திரு. சரத்பவார், நாக்பூர், மற்றும் கோண்டியா மாவட்டங்களில் வாக்கு சேகரித்தார்.

மற்றொரு துணை முதலமைச்சர் திரு. அஜித் பவார், தமது பிரிவைச் சேர்ந்த தேசியவாத காங்கிரஸ் கட்சி வேட்பாளர்களுக்கு ஆதரவாக மும்பையின் கோவண்டி பகுதியில் பிரச்சாரம் மேற்கொண்டார்.

<<<<>>>>

இந்திய ராணுவ பாரம்பரிய விழா இன்று புதுதில்லியில் தொடங்குகிறது.

இரண்டு நாட்கள் நடைபெறும் இந்த விழாவை முப்படைத் தளபதி ஜெனரல் அனில் சௌஹான் தொடங்கி வைக்கிறார்.

ஓய்வு பெற்ற ஏர்மார்ஷல் விக்ரம்சிங் எழுதிய ‘இந்தோ-பாகிஸ்தான் விமானப் போரின் வரலாறு’ என்ற புத்தகம், இந்திய ராணுவத்தின் வீரம் மற்றும் மரியாதை என்ற புத்தகம் வெளியிடப்படுகிறது.

தில்லி மற்றும் அதன் சுற்று வட்டாரத்தைச் சேர்ந்த பள்ளி கல்லூரிகளின் தேசிய மாணவர் படையினர் இந்த ராணுவ பாரம்பரிய விழாவில் பங்கேற்கின்றனர்.

<<<<>>>>

நாட்டில் கடந்த 10 ஆண்டுகளில் தீவிரவாத சம்பவங்கள் 70 சதவீதம் குறைந்துள்ளதாக மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா கூறியுள்ளார்.

புதுதில்லியில் தேசிய புலனாய்வு முகமையின் தீவிரவாத எதிர்ப்பு மாநாட்டை அவர் தொடங்கி வைத்தார்.

தீவிரவாதம் மற்றும் அவர்களுக்கு ஆதரவளிக்கும் முழு கட்டமைப்மைக்கும் எதிராக தேசிய தீவிரவாத எதிர்ப்புக் கொள்கை மற்றும் திட்டமிடலை உள்துறை அமைச்சகம் விரைவில் அறிமுகப்படுத்தும் என்று அவர் தெரிவித்தார்.

பல்வேறு வகையான தீவிரவாதம், கள்ளநோட்டு மற்றும் போதைப்பொருள் உள்ளிட்ட வழக்குகளில் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாக அவர் கூறினார்.

தீவிரவாதத்தை எதிர்த்துப் போராடும் அமைப்புகள் சட்டவிரோத தடுப்பு நடவடிக்கை சட்டத்தை பயன்படுத்துவதுடன் தேசிய புலனாய்வு முகமையின் உதவியை நாட வேண்டும் என்றும் திரு. அமித் ஷா அறிவுறுத்தினார்.

<<<<>>>>

வெளியுறவு அமைச்சர் திரு. ஜெய்சங்கர் தமது ஆஸ்திரேலிய பயணத்தை முடித்துக்கொண்டு இன்று சிங்கப்பூர் செல்கிறார்.

அங்கு அந்நாட்டு அதிபர் திரு. தர்மன் ஷண்முக ரத்னம், பிரதமர் திரு. லாரன்ஸ் வாங், துணைப் பிரதமர் திரு. **Gan Kim Yong** ஆகியோரை சந்தித்துப் பேச உள்ளார்.

அத்துடன் சிங்கப்பூர் பாதுகாப்பு அமைச்சர் திரு. **Ng Eng Hen** மற்றும் வெளியுறவு அமைச்சர் திரு. விவியன் பாலகிருஷ்ணன் ஆகியோரை சந்தித்து விவாதிக்க உள்ளார்.

அப்போது இருதரப்பு உறவுகளை மேம்படுத்துவதற்கான வழிமுறைகள் குறித்து அவர் விவாதிக்க உள்ளார்.

ஆசியான் இந்தியா மையத்தில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள நிகழ்ச்சியிலும் திரு. ஜெய்சங்கர் பங்கேற்க உள்ளார்.

<<<<>>>>

ஜார்கண்ட் சட்டப்பேரவைத் தேர்தல் பிரச்சாரத்தின்போது நடத்தை நெறிமுறைகளை பின்பற்ற வேண்டும் என்று அனைத்துக் கட்சிகளையும் தேர்தல் ஆணையம் கேட்டுக்கொண்டுள்ளது.

ராஞ்சியில் நடைபெற்ற பல்வேறு கட்சிப் பிரதிநிதிகள் உடனான கூட்டத்தில் உரையாற்றிய ஜார்கண்ட் தலைமைத் தேர்தல் அதிகாரி திரு. ரவிக்குமார், பொய்யான வாக்குறுதிகளை வாக்காளர்களுக்கு அளிப்பதை தவிர்க்க வேண்டும் என்று அறிவுறுத்தினார்.

தேர்தல் பிரச்சாரத்தின்போது தனிநபர் தாக்குதலில் ஈடுபடக்கூடாது என்றும் அவர் கேட்டுக்கொண்டார்.

அத்துடன் முறையற்ற வார்த்தைப் பிரயோகங்களைப் பயன்படுத்தக்கூடாது என்றும் ஜார்கண்ட் தலைமைத் தேர்தல் அதிகாரி பல்வேறு கட்சிப் பிரதிநிதிகளுக்கு அறிவுறுத்தினார்.

<<<<>>>>

இந்திய சாலை கூட்டமைப்பின் ஆண்டு அமர்வு சத்தீஸ்கட் மாநிலம் ராய்ப்பூரில் இன்று தொடங்குகிறது.

இதை மத்திய சாலைப் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைத்துறை அமைச்சர் திரு. நிதின் கட்கரி தொடங்கி வைக்கிறார்.

நான்கு நாட்கள் நடைபெறும் இக்கூட்டத்தில் பல்வேறு தொழில்நுட்ப அமர்வுகள் நடைபெற உள்ளன.

சாலைக் கட்டமைப்பு தொடர்பான புதிய தொழில்நுட்பங்கள் குறித்து இதில் விவாதிக்கப்பட உள்ளது.

உள்நாடு மற்றும் வெளிநாடுகளைச் சேர்ந்த 2 ஆயிரத்துக்கும் மேற்பட்ட நிபுணர்கள் இதில் பங்கேற்க உள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

<<<<>>>>

தமிழகத்தின் விழுப்புரத்தில் இருந்து செகந்தராபாதுக்கு இன்று மாலை மணி 4.05க்கு சிறப்பு ரயில் இயக்கப்படும் என்று தெற்கு ரயில்வே அறிவித்துள்ளது.

இதேபோல் 15ஆம் தேதியும் இந்த ரயில் இயக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கிடையே தாம்பரம் - ஹைதராபாத் சார்மினார் எக்ஸ்பிரஸ் ரயிலில் இரண்டு பொதுப் பெட்டிகளுக்குப் பதிலாக இரண்டு படுக்கை வசதிகள் கொண்ட பெட்டிகள் இணைக்கப்படும் என்று தெற்கு ரயில்வே வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

<<<<>>>>

தலைநகர் தில்லியில் காற்றின் தரம் தொடர்ந்து மோசமாக உள்ளது என்று மத்திய மாசுக் கட்டுப்பாட்டு வாரியம் தெரிவித்துள்ளது.

இன்று காலை நிலவரப்படி காற்றின் தரக் குறியீடு 384 புள்ளிகளாக பதிவானது என்று கூறியுள்ளது.

அடுத்த இரண்டு, மூன்று நாட்களுக்கு இரவு மற்றும் காலை நேரங்களில் பனிப்பொழிவுடன் கூடிய காற்றுமாசு நிலவக்கூடும் என்று தெரிவித்துள்ளது.

<<<<>>>>

சத் பூஜை பண்டிகை நிறைவையொட்டி பயணிகள் நெரிசலை தவிர்க்கும் வகையில் 500க்கும் மேற்பட்ட சிறப்பு ரயில்களை இயக்குவதற்கு இந்திய ரயில்வே முடிவு செய்துள்ளது.

சமஸ்திபூர், தனப்பூர் உள்ளிட்ட இடங்களில் இருந்து கூடுதல் ரயில்கள் இயக்கப்பட உள்ளது.

இன்று 144 சிறப்பு ரயில்களும், நாளை 160 சிறப்பு ரயில்களும் இயக்கப்பட உள்ளன.

கடந்த மாதம் முதல் இம்மாதம் வரை பண்டிகை காலத்தையொட்டி அதிகரிக்கும் கூட்ட நெரிசலைத் தவிர்ப்பதற்காக மொத்தம் 7 ஆயிரத்து 774 சிறப்பு ரயில்கள் இயக்கப்படுவதாக இந்திய ரயில்வே தெரிவித்துள்ளது.

இது கடந்த ஆண்டைவிட 73 சதவீதம் அதிகம் என்றும் அது கூறியுள்ளது.

<<<<>>>>

உத்தரப்பிரதேச மாநிலத்தல் சத்பூஜை பண்டிகை வெகு விமரிசையாக கொண்டாடப்பட்டது.

நேற்று மாலை சூரிய அஸ்தமனத்தின்போது பக்தர்கள் வழிபாட்டில் ஈடுபட்டனர்.

இன்று காலை ஆயிரக்கணக்கான பக்தர்கள் நீர்நிலைகளில் கூடி சூரியனை வணங்கினார்கள்.

நான்கு நாட்கள் விரதம் இன்று காலையுடன் நிறைவடைந்தது.

சிறுவர்கள் பட்டாசுகளை வெடித்து மகிழ்ந்ததாகவும், சத் பாடல்கள் பாடப்பட்டதாகவும் எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

<<<<>>>>

உலக செஸ் தரவரிசையில் இந்தியாவின் அர்ஜுன் எரிகேசி இரண்டாம் இடத்திற்கு முன்னேறியுள்ளார்.

சென்னையில் நடைபெற்று வரும் செஸ் கிராண்ட் மாஸ்டர் போட்டியின் 3வது சுற்றில் செர்பியாவின் **Alexey Sarana**-வை வென்றதன் மூலம் அவர் இத்தகுதியைப் பெற்றார்.

உலக செஸ் தரவரிசையில் 2 ஆயிரத்து 805 புள்ளிகளைப் பெற்றதன் மூலம் விஸ்வநாதன் ஆனந்திற்குப் பிறகு 2 ஆயிரத்து 800 புள்ளிகளைக் கடந்த 2வது இந்திய வீரர் என்ற பெருமையை அர்ஜுன் எரிகேசி பெற்றுள்ளார்.

மற்றொரு 3வது சுற்றுப் போட்டியில் இந்திய வீரர்கள் அரவிந்த் சிதம்பரம் - விதித் குஜராத்தி ஆகியோருக்கு இடையேயான ஆட்டம் டிராவில் முடிவடைந்தது.

<<<<>>>>

இந்தியா – தென்னாப்பிரிக்கா அணிகளுக்கு இடையிலான முதலாவது ட்வெண்ட்டி ட்வெண்ட்டி கிரிக்கெட் போட்டி இன்று நடைபெறுகிறது.

டர்பனில் நடைபெற உள்ள இப்போட்டி இரவு மணி 8.30க்கு தொடங்குகிறது.

தென்னாப்பிரிக்காவில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு வரும் இந்திய அணி, 4 போட்டிகளைக் கொண்ட ட்வெண்ட்டி ட்வெண்ட்டி போட்டித்தொடரில் பங்கேற்கிறது.

<<<<>>>>

தேசிய சீனியர் ஹாக்கி சாம்பியன் போட்டியில் தமிழக அணி 43-0 என்ற கோல் கணக்கில் அந்தமான் நிகோபார் அணியை வென்றது.

சென்னையில் நடைபெற்று வரும் இப்போட்டியில் கேப்டன் கார்த்தி 13 கோலும், சோமன்னா, சுந்தரபாண்டி ஆகியோர் தலா 9 கோலும், மாரீஸ்வரன் சக்திவேல் 6 கோலும் அடித்தனர்.

ப்ரித்வி 3 கோலும், செல்வராஜ் கனகராஜ் 2 கோலும், ஷியாம் குமார் ஒரு கோலும் அடித்தனர்.

<<<<>>>>

புவனேஸ்வரில் நடைபெற்று வரும் சர்வதேச டென்னிஸ் போட்டியின் ஆடவர் பிரிவில் தேவ் ஜாவியா, செந்தில்குமார், கரண்சிங், பிரஜ்வல் தேவ் ஆகியோர் காலிறுதிச் சுற்றுக்கு முன்னேறியுள்ளனர்.

<<<<>>>>

ஐ.எஸ்.எல். கால்பந்துப் போட்டியில் ஹைதராபாத் 2-1 என்ற கோல் கணக்கில் கேரளா அணியை வென்றது.

ப்ரோ கபடி லீக் போட்டியில் தில்லி – பெங்கால் அணியையும், ஹரியானா – குஜராத் அணியையும் வென்றன.

**<<<<The End>>>>**